LIBRA
15 OCT 2005
University, Sri L

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## First Examination in Diploma Business Administration 2003/04 (March 2005) (Repeat)

## DBA 103 Financial Accounting

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

---

1. சண்முகம் என்னும் தனி வியாபாரியின் 31.12.2004 இல் உள்ளவாறான பரீட்சைமீதி பின்வருமாறு :

| | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|
| மூலதனம் | | 800000 |
| விற்பனைகள் | | 800000 |
| கொள்வனவுகள் | 400000 | |
| உள்வந்த வண்டிக் கூலி | 10000 | |
| கடன்பட்டோர் | 120000 | |
| கடன்கொடுத்தோர் | | 130000 |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடு 01.01.2004 இல் | | 10000 |
| சம்பளங்கள் | 150000 | |
| நிலையான சொத்துக்கள் கிரயத்தில் / பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| 01.01.2004 இல்: | | |
| காணி கட்டடம் | 350000 | 50000 |
| மோட்டார் வாகனங்கள் | 300000 | 150000 |
| தளபாடம் பொருத்திகள் | 200000 | 50000 |
| இருப்புக்கள் 01.01.2004 | 130000 | |
| 15% முதலீடுகள் | 100000 | |
| காப்புறுதி | 25000 | |
| கட்டடப் பராமரிப்பு | 40000 | |
| நிர்வாகச் செலவுகள் | 70000 | |
| மின்சாரம் | 8000 | |
| விற்பனைத் தரகு | 30000 | |
| பெறுமதி கூட்டிய வரி | 30000 | |
| காசும் வங்கியும் | 37000 | |
| பெற்ற முதலீட்டு வருமானம் | | 10000 |
| | **2000000** | **2000000** |

மேலதிகத் தகவல்கள் :

i. 31.12.2004 இல் இருப்பு – ரூ.125000.

ii. 31.12.2004 இல் சென்மதிகள்:

மின் கட்டணம் - ரூ.2000

சம்பளம் - ரூ.20000

iii. கடன்பட்டோரில் ரூ.5000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்பட வேண்டும். பின்னர் 10% ஐயக்கடனுக்கான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

iv. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

காணி கட்டடம் - 5% ஆண்டுக்கு கிரயத்தில்

மோட்டார் வாகனங்கள் - 10% ஆண்டுக்கு கிரயத்தில்

தளபாடம் பொருத்திகள் - 10% ஆண்டுக்கு குறைந்து செல் மீதியில்

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 31.12.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு.

ii. 31.12.2004 இல் உள்ளவாறான ஐந்தொகை.

(40 புள்ளிகள்)

LIBR

2. சந்திரன் என்னும் தனிவியாபாரி தனது கணக்கேடுகளை முறையாகப் பேணுவதில்லை. ஆயினும் 31.12.2004 இல் முடிவுற்ற தனது நிதியாண்டுக்கு பின்வரும் தகவல்களை வழங்கக்கூடியவராக உள்ளார்.

காசுக் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்:

| | ரூபா |
|---|---|
| கடன் கொடுத்தோருக்குச் செலுத்தியது | 100000 |
| தளபாடம் வாங்கியது | 30000 |
| சம்பளம் செலுத்தியது | 20000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றது | 200000 |
| வாடகை செலுத்தியது | 10000 |
| ஏனைய செலவுகள் | 14000 |

ஏனைய மீதிகள் :

| | 01.01.2004 | 31.12.2004 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கட்டடம் | 75000 | 70000 |
| தளபாடம் | 20000 | 45000 |
| இருப்புக்கள் | 15000 | 20000 |
| கடன்பட்டோர் | 25000 | 30000 |
| கடன் கொடுத்தோர் | 15000 | 10000 |
| சம்பளம் சென்மதி | 5000 | 10000 |
| காசு மீதி | 5000 | ? |

ஏனைய தகவல்கள் :

i. சந்திரன் ஆண்டுக் காலத்தில் வாராந்தம் ரூ.500 வைத் தனது சொந்த பாவனைக்காக வியாபாரத்திலிருந்து பற்றியிருந்தார்.

ii. ஆண்டுக் காலத்தில் நிலையான சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. காசுக் கணக்கு

ii. 31.12.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு

iii. 31.12.2004 இல் உள்ளவாறான ஐந்தொகை

(20 புள்ளிகள்)

3. ஆதவன் ஸ்ரோரின் 2004 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்று பின்வருமாறு :

| திகதி | விபரம் | காசோலை இல. | வரவு. | செலவு | மீதி |
|---|---|---|---|---|---|
| 2004 | | | | | |
| ஜன 1 | மீதி | | | | 20000 |
| 4 | ரவி | 83942 | 17000 | | 3000 |
| 5 | வைப்பு | 60274 | | 10000 | 13000 |
| 8 | ரமேஷ் | 83943 | 9000 | | 4000 |
| 12 | வைப்பு | 95683 | | 7500 | 11500 |
| 18 | சஞ்சீவ் | 83944 | 8000 | | 3500 |
| 24 | பங்கிலாபம் | | | 5000 | 8500 |
| 28 | நாதன் நேரடி வைப்பு | | | 3500 | 12000 |
| 31 | நிலையியற் கட்டளை (மின் கட்டணம்) | | 6000 | | 6000 |
| | வங்கிக் கட்டணம் | | 1000 | | 5000 |

அதே மாதத்திற்கான அதன் வங்கிக் கணக்கு பின்வருமாறு :

| திகதி | | காசோலை | ரூபா | திகதி | | காசோலை | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 2004 | | | | 2004 | | | |
| ஜன.1 | மீதி | | 20000 | ஜன.2 | ரவி | 83942 | 17000 |
| 2 | குகன் | 60274 | 10000 | 4 | ரமேஷ் | 83943 | 9000 |
| 8 | கமல் | 95683 | 7500 | 10 | சஞ்சீவ் | 83944 | 8000 |
| 20 | நிமல் | 59206 | 6500 | 18 | மோகன் | 83945 | 7200 |
| 25 | றிஸ்வி | 74889 | 8000 | 25 | தளபாடம் | 83946 | 4300 |
| 29 | ஜீவன் | 29857 | 5000 | 30 | சுதன் | 83847 | 6900 |
| | | | | 31 | மீதி | | 4600 |
| | | | 57000 | | | | 57000 |

வேண்டப்படுவது :

i. காசேட்டைத் திருத்துக.

ii. 31.01.2004 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

4. ரமணன் ஸ்ரோரின் கணக்குப் பதியுநரினால் 31.12.2004 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

i. விற்பனை நாளேடு ரூ.1000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

ii. கொள்வனவு நாளேடு ரூ.10000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.

iii. வாடகைக் கணக்கு ரூ. 8000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

iv. பெற்ற கழிவு ரூ. 2000 கொடுத்த கழிவுக் கணக்கில் தவறாகப் பதியப் பட்டிருந்தது

v. தளபாடக் கொள்வனவு ரூ. 10000 கொள்வனவுக் கணக்கில் பதியப் பட்டிருந்தது.

vi. மோட்டார் வாகன விற்பனை ரூ. 20000 விற்பனைக் கணக்கில் பதியப் பட்டிருந்தது.

vii. காப்புறுதிக் கட்டணம் ரூ. 5400 அதே கணக்கில் ரூ. 4500 ஆகப் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது :

i. கணக்கீட்டு வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

ii. தொங்கல் கணக்கினைத் தயாரிக்குக.

iii. வழுக்களைத் திருத்துவதற்கு முன்னர் தேறிய இலாபம் ரூ. 85000 எனக் கருதின் வழுக்களைத் திருத்திய பின்னர் உள்ளவாறான தேறிய லாபத்தைக் கணிக்குக.

(20 புள்ளிகள்)

LIBRARY
15 OCT 200
Eastern University, Sri